**<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>**
<u>OS.No. 751 / 2022</u>

**பி.வா.சா.1. அருண்குமார்** **17.11.2023**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் நாமக்கலில் ராசிபுரத்தில் உள்ள பாவை பொறியியல் கல்லூரியில் இளங்கலை பட்ட படிப்பு படித்துள்ளேன். பள்ளிப்படிப்பை தாராபுரத்தில் உள்ள விவேகம் மேல்நிலைப்பள்ளியில் படித்தேன். ஆரம்பத்தில் இருந்தே எனது பள்ளி படிப்பையும் கல்லூரி படிப்பையும் விடுதியில் தங்கி படித்தேன் என்றால் பள்ளி படிப்பை வீட்டில் இருந்து பேருந்தில் சென்று வந்தேன். கல்லூரி படிப்பை நான் கல்லூரி விடுதியில் தங்கவில்லை. கல்லூரிக்கு வெளியே வீடு வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தேன். பள்ளி படிப்பு ஆரம்பித்து கல்லூரி படிப்பு வரை எனக்கு படிப்பு செலவை யார் செலுத்தி வந்தார்கள் என்றால் எனது பெற்றோர் செலுத்தி வந்தார். எனது தாயாருக்கு தனிப்பட்ட முறையில் ஏதேனும் சுவாஜ்ஜிய சொத்து உள்ளதா என்றால் தாவா சொத்து இல்லாமல் கல்லிமந்தையில் 5 ஏக்கர் சொத்து உள்ளது. அது அவரது தகப்பனார் வழியாக வந்தது. எனக்கு தாவா சொத்தை தவிர தனிப்பட்ட சொத்து ஓடைப்பட்டி கிராமத்தில் 6 ஏக்கர் உள்ளது. அந்த சொத்து எனது பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. எனது பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து ஒரு நூர்ஜகானிடமிருந்து 2017 மற்றும் 2018-ம் ஆண்டில் கிரையம் பெறப்பட்டது. எனது தாயார் பெயருக்கு அவரது உடன்பிறந்த சகோதரர் எழுதி வைத்ததாக சொல்லப்படும் தேதி எனக்கு ஞாபகமில்லை. எனது தாயார் பெயரில் தனிப்பட்ட சொத்து எதுவும் இல்லை என்றும் வழக்கிற்காக எனது தாயார் பெயரில் தனிப்பட்ட சொத்து உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் தவறு. எனது தாயார் பெயரில் தனிப்பட்ட சொத்து உள்ளது என்பதை நிரூபணம் செய்வதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை எந்த தேதியில் கிரையம் பெறப்பட்டது என்றால் தேதி ஞாபகமில்லை. 4-வது மாதம் 2014-ம் ஆண்டு கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற சர்வே எண்.132. எனக்கு தாவா சொத்தின் புல எண் தெரியாது என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் தவறு. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு நானும் எனது தாயாரும் தாவா சொத்துக்களை பார்வையிட்டு அதன் இயற்கை அமைப்புகள் மற்றுல் எல்கைகளை பார்த்து வந்தோம் என்றால் சரிதான். நான் எனது பெயரில் வாங்கிய கிரைய பத்திரத்தில் எனது முகவரி தளிஞ்சுக்காட்டு தோட்டம் என்று வா.சா.ஆ.11-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதியின் விலாசம் வா.சா.ஆ.11-ல் இளந்தமடைத் தோட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரிதான். இளந்தமடைத்தோட்டம் என்பது தாவா சொத்தின் ஸ்தலப் பெயர் என்றால் சரிதனா். அரசு சம்மந்தமான ஆவணங்களில் தாவா சொத்திற்கான ஸ்தலப் பெயர் இளந்தைமரத் தோட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் இரண்டு ஆஸ்பட்டாசீஸ் கட்டிடம் தற்போது வரை உள்ளது என்றால் இரண்டு கட்டிடம் இல்லை ஒரு கட்டிடம் தான் உள்ளது. நீதிமன்றத்தில் ஆணையா் நியமித்து அறிக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. வா.சா.ஆ,11 ஆவணத்தில் ஒரு கட்டிடம் விவசாயம் உபயோகசாலை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விவசாய உபயோகசாலைக்கு மின் இணைப்பு உள்ளது என்றால சரிதான். அந்த மின் இணைப்பு எண் என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.11 ஆவணத்தில் மின் இணைப்பு எண்.363 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கட்டிடத்தின் அளவு கிழமேல் இருபுறமும் 31, தென்வடல் இருபுறமும் 32 ஆக 992 சதுரடி என்று சொன்னால் சரிதான். இந்த கட்டிடத்திற்கு கீழ் புறம் கிழமேல் 67 அடியும் தென்வடல் 30 அடியும் அளவுள்ள ஆஸ்பட்டாசீஸ் போடப்பட்டுள்ள ஒரு கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அது செட். அதற்கான மின் இணைப்பு எண்.387 என்றால் சரிதான். அந்த மின் இணைப்பு கமா்சியல் மின் இணைப்பு. அந்த கட்டிடத்தில இந்த 3-ம் பிரதிவாதி குடிநீா் சுத்திகரிப்பு அமைத்து அது சம்மந்தப்பட்ட இயந்திர உபகரணங்கள் அந்த கட்டிடத்தில் பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணயா் நியமித்து கட்டிடங்களை பாா்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. விவசாய உபயோக சாலைக்கும் அதற்கு கிழபுறம் உள்ள ஆஸ்பிட்டாசீஸ் கட்டிடத்திற்கு கீழ் சா்வே எண்.130/2ஏ5-ல் ஒரு ஆழ்துளைகிணறு உள்ளது என்றால் உள்ளது. ஆனால் அதன் சா்வே எண் எனக்கு தெரியாது. அந்த ஆழ்துளைக்கிணற்றில் இருந்து மின் இணைப்பு எண்.387 மூலம் தண்ணீா் எடுக்கப்பட்டு சுத்திகரிப்பு ஆலையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வியாபார ரீதியில விற்பனை செய்து வந்தாா் என்றால் கிரையத்திற்கு முன்பு விற்பனை செய்து வந்தாா். எங்களது கிரைய பத்திரத்தீ அந்த ஆஸ்பட்டாசீஸ் கட்டிடத்தையும் அதில் பொருத்தப்பட்டுள்ள 50 இலட்சம் மதிப்புள்ள குடிநீா் சுத்திகரிப்பு உபகரணங்களையும் மறைத்து கிரையம் பெற்றேன் என்றால் தவறு. அந்த ஆஸ்பிட்டாசீஸ் கட்டிடத்தில் இருந்து குடிநீா் சுத்திகரிப்பு இயந்திரங்கள் கிரையம் பதியும் காலத்தில் அப்புறப்படுத்தப்பட்டது. நான் பொய் சொல்கிறேன் என்றும் தற்போதும் குடிநீா் சுத்திகரிப்பு இயந்திரங்கள் இருந்து வருகிறது என்றும் சொன்னால் தவறு. 3-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிா்வழக்குரையில் சில ஆவணங்கள் குறித்து சொல்லியுள்ளாா் என்றும் அதன் விபரங்கள் எனது

வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். 3-ம் பிரதிவாதி 10.10.2013-ம் தேதி குடிநீர் சுத்திகரிப்பு ஆலையை நடத்துவதற்கு தீயணைப்பு துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற்றுள்ளதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த 3-ம் பிரதிவாதி ஆரம்பித்த குடிநீர் சுத்திகரிப்பு ஆலையின் பெயர் துரை அக்குவா நிறுவனம் என்ற பெயரில் நடத்தி வந்தார் என்றால் தெரியாது. அந்த சுத்திகரிப்பு தொழிலை 3-ம் பிரதிவாதி 10.10.2013-ம் தேதி முதல் தொடர்ந்து செய்து வந்தார் என்று சொன்னால் அதற்கு முன்பாகவே நடத்தி வந்தார். 3-ம் பிரதிவாதி குடிநீர் சுத்திகரிப்பு தொழிலுக்கு மத்திய அரசிடமிருந்து தரக்கட்டுபாட்டு சான்று 20.05.2014-ம் தேதி பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 கிரைய ஆவணங்களில் கண்ட கிரைய சொத்துக்களை 3-ம் பிரதிவாதி இன்றுவரை எங்களுக்கு சுவாதீனம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் தவறு. கிரையம் பெற்ற பின்பு வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 கண்ட சொத்துக்களை நான் சென்று பார்த்துள்ளேன். அந்த கிரைய சொத்துக்களில் விவாசய உபயோக சாலை என்ற இடத்தில் 3-ம் பிரதிவாதி, அவரது தாயார் மற்றும் அவரது இளவர்கள் இன்று வரை குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. மின் இணைப்பு எண்.363-க்கு ஒரு மாதத்திற்காவது நான் மின் கட்டணம் செலுத்தி வந்தேனா என்றால் செலுத்தி வந்தேன். ஆனால் ரசீதை நான் எடுத்து வைக்கவில்லை. மின் கட்டணம் உத்தேசமாக 500-ல் இருந்து 1000 ரூபாய் வரை வரும். 04.06.2018-ம் தேதி சார் ஆட்சியர் பழனி அவர்கள் தாவா சொத்தை பார்வையிட்டு குடிநீர் சுத்திகரிப்பு ஆலை இயங்கி வருவதை நேரில் கண்டார் என்றால் எனக்கு தெரியாது. சார் ஆட்சியர் வழக்கு சொத்தை பார்வையிடுவதற்கு முன்பாகவே வருவாய் ஆய்வாளர் சின்னக்கம்பட்டி அவர்கள் 01.05.2018-ம் தேதியிலும் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அவர்கள் 03.05.2018-ம் தேதியிலும் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு அதில் இயங்கிவரும் குடிநீர் சுத்திகரிப்பு ஆலையை பார்வையிட்டு சார் ஆட்சியர் பழனி அவர்களுக்கு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறு. எனது நிலத்தில் யாரும் பார்வையிடவில்லை. 04.06.2018-ம் தேதி சார் ஆட்சியர் பழனி அவர்கள் தாவா சொத்தை பார்வையிட்டு பூமிக்கு அடியில் உள்ள நீரை வியாபார ரீதியில் எடுத்து பயன்படுத்துவது சட்டவிரோதம் என குறிப்பிட்டு அதற்கு விளக்கம் அளிக்குமாறு கோரி 3-ம் பிரதிவாதிக்கும் அவரது தாயாருக்கும் மற்றும் ஒரு ராஜா என்பவருக்கும் அறிவிப்பு கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பின்னிட்டு சார் ஆட்சியர் 22.05.2018-ம் தேதி ஏற்கனவே விளக்கம் கேட்டு விளக்கம் சமர்ப்பிக்கப்படாததால் குடிநீர் சுத்திகரிப்பு ஆலையை மூடி சீல் வைக்கப்பட்டதாக இறுதி உத்தரவு வழங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போதும் அந்த குடிநீர் சுத்திகரிப்பு ஆலை சார் ஆட்சியர் பழனி

அவர்களால் மூடி சீல் வைக்கப்பட்டு தற்போது வரை இருந்து வருகிறது என்றால் அவ்வாறு எனது இடத்தில் இல்லை. எனது தாயார் இடமான வா.சா.ஆ.10 -ல் கண்ட சொத்திலும் இல்லை. சார் ஆட்சியர் இறுதி உத்தரவு பிறப்பித்தது சம்மந்தமாக மின்சார வாரியத்திற்கும் மின் இணைப்பு எண்.387 துண்டிக்குமாறு உத்தரவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்டத உத்தரவின் பேரில் கே.கீரனூர் உதவி மின் பொறியாளர் 05.06.2018-ம் தேதி மின் இணைப்பு எண்.387 ஐ துண்டித்து அதற்கான உத்தரவை 3-ம் பிரதிவாதிக்கு அனுப்பி வைத்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 2014-ம் ஆண்டு கிரையம் பெறப்பட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட காலம் வரை 3-ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள ஆஸ்பட்டாசீஸ் கட்டிடத்தில் இயங்கி வந்த குடிநீர் சுத்திகரிப்பு ஆலையை இயக்கி அதற்குண்டான மின் கட்டணத்தை செலுத்தி வியாபார ரீதியில் குடிநீர் விற்பனை செய்து வந்தார் என்றால் என்னுடைய இடத்தில் இல்லை. விவசாய உபயோகசாலையில் உள்ள மின் இணைப்பு எண்.363-க்கு கிரைய தேதிக்கு முன்பு இருந்து இன்று வரை 3-ம் பிரதிவாதி அவரது தாயார் அவரது மனைவி ஆகியோர்கள் தான் செலுத்தி வருகிறார்கள் என்றால் தவறு. மின் இணைப்பு எண்.363-க்கு கடந்த 9 ஆண்டுகளுக்கு ஒரு ரசீதாவது என்னால் காட்ட முடியுமா என்றால் முடியும்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2023.11.17 18:00:43 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்